1972 மார்ச் 24]

Post-graduate course in Pharmacy

* 679 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a Post-graduate course in Pharmacy in the Medical Colleges in the State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) மருந்தாக்கியல் மேல் பட்டப் படிப்பு (M. Sc.. Pharmacy) தற்போது ஆண்டிற்கு நான்கு மாணவர்களைச் சேர்த்து, சென்னை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகின்றது.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, தற்போது பார்மசி வகுப்புகளில் படிக்கிறவர்களுக்குச் சரியான முறையில் டிப்ளமோ கிடைக்காத காரணத்தினால் அவர்கள் வெளிமாநிலங்களிலிருந்து வாங்குகிறார்களே, அதற்காக அதிகப்படியாகக் கொடுக்க தக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு செய்தி அரசுக்குக் கிடைக்கவில்லை. எம்.எஸ்.சி. பட்டப் படிப்பு இரண்டு ஆண்டுக் காலம் படித்து, பல்கலைக் கழகத்தின் தேர்வு எழுத வேண்டும். அவர்கள் சொல்வது பி எஸ்.சி., பார்மசி படித்தவர்களுக்குரிய பாடமாகும்.

கலைஞர் கருணாநிதி நகருக்கு மருத்துவ மனை

*680 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?—

தென் சென்னையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி நகரில் ஒரு பெரிய மகப்பேறு மருத்துவமனை கட்டுவதற்கான திட்டம் அரசின பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை நகரத்துடன் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள—எக்ஸ்டன்ஷன் பகுதி—கலைஞர் கருணாநிதி நகர், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு. ஒரு பெரிய மருத்துவ மனையைத் துவக்கட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே ஒரு சிறு குழப்பம். மகப்பேறு மருத்துவமனை என்று கேட்கப் பட்டதாக அறிகிறேன். இப்போது ஒரு பெரிய மருத்துவமனை வேண்டும் என்று கேட்கிறார்கள். மகப்பேறு மருத்துவமனை தேவையென்றால், நகரின் பல்வேறு பகுதிகளுக்கு மகப்பேறு மருத்துவமனை மாநகராட்சியால் அமைத்துத் தரப்படுகின்றது. அவர் கேட்பது பெரிய மருத்துவமனையாக இருக்குமானால் அதற்குப் பெரிய தொகை செலவாகும் என்பதால், எதிர்காலத்தில் இதுபற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.